www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination – 2021

FWC

அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

Two Hours | Gr -13 (2021) | 23 | T | I

### பகுதி I

- **1-10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான கூற்றுக்களை கொண்டுள்ளது அவற்றில் நான்கு கூற்றுக்கள் சரியானவையாகும் சரியான சரியான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

1. அரசறிவியல் என்பது
   A - ஓர் புராதன கற்கையாகும்
   B - கி.மு நான்காம் நூற்றாண்டில் புராதன கிரேக்கத்தில் ஆரம்பமானது
   C - 25 நூற்றாண்டுகளில் கட்டியெழுப்பப்பட்டு மாற்றமடைந்து அபிவிருத்தி அடைந்துவருகின்றது.
   D - அரசு அரசாங்கம் என்பவற்றினை மையப்படுத்தியதாகும்.
   E - 21ம் நூற்றாண்டில் விஞ்ஞான மூலக்கொள்கையை ஏற்றுக்கொண்டு வளர்ச்சி அடைந்துள்ளது.
   1) ABCD 2) BCDE 3) ACDE 4) ABCE 5) ABDE

2. தத்துவார்த்த அணுகுமுறை என்பது.
   A - அரசயில் ஆய்வில் முதலில் பயன்படுத்தப்பட்ட அணுகுமுறை ஆகும்.
   B - பிளேட்டோ மற்றும் அரிஸ்ரோட்டில் இதன் முன்னோடிகளாவர்.
   C - பெறுமானங்களின் முடிவுகளை உள்ளடக்கியுள்ளது.
   D - இருபதாம் நூற்றாண்டில் இம்மானுவேல் காண்ட் இதனை தனது ஆய்வுகளில் பயன்படுத்தியுள்ளார்.
   E - அரசியல் உலகு தொடர்பாக காணப்படும் பிரதான முரண்பாடுகளை விவாதிக்கின்றது.
   1) ABCD 2) BCDE 3) ACDE 4) ABCE 5) ABDE

3. ஒப்பீட்டு அரசியல் என்பது.
   A - 1950 தசாப்தங்களின் பின்னர் நிலையான துறையாக அபிவிருத்தி அடைந்துள்ளது.
   B - அமெரிக்க அரசியல் விஞ்ஞானத்துறையில் ஆரம்பிக்கப்பட்டது.
   C - தற்போது தேர்தல் முறைமைகளையே அதிக கரிசனை கொண்டுள்ளது.
   D - அமெரிக்க ஐரோப்பியாவினை மையப்படுத்திய அரசியல் பாடப்பரப்பு மாற்றமடைந்துள்ளது.
   E- முக்கியமான கருத்தியல்களை சர்வதேச ரீதியில் ஒப்பீட்டு ஆராய முடியும்.
   1) ABCD 2) BCDE 3) ACDE 4) ABCE 5) ABDE

4. அரசியல் கட்சிகள்
   A - அரசாங்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்துகின்றது.
   B - அரசியல் பதவிகளுக்கு தலைவர்களை பயிற்றுவிக்கின்றது.
   C - அரசியல் பிரச்சனைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுகின்றது.
   D- பொதுக்கொள்கை செயன்முறைக்கு பொதுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றது.
   E- ஆட்சி முறையில் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.
   1) ABCD 2) BCDE 3) ACDE 4) ABCE 5) ABDE

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

5. ஒற்றையாட்சி அரசாங்க முறை என்பது.

A - அரச அதிகாரத்தினை பங்கீடு செய்யப்பட்ட அரசாங்க முறை ஆகும்.

B - தனி அதிகார மையத்தினை கொண்டமைந்துள்ளது.

C - சிறிய நிலப்பரப்புடைய நாடுகளுக்கு அதிகம் பொருந்தும்.

D - பல்லின சமூகங்கள் ஒற்றுமையா வாழ்வதற்கான சிறந்த அரசாங்க முறையாகக் கொள்ளப்படுகின்றது.

E - தனிநிர்வாக மற்றும் நீதித்துறை முறைகளைக் கொண்டதாகும்.

1) ACDE 2) ABE 3) BCE 4) ABCD 5) ABCE

6. மந்திரி சபை அரசாங்கமுறை

A - பாராளுமன்ற அரசாங்க முறை எனவும் அழைக்கப்படுகின்றது.

B - அரசின் தலைவர் மற்றும் அரசாங்கத்தின் தலைவராக பிரதமர் காணப்படுகின்றார்.

C - ஜனநாயக தன்மை குறைவாகவும் செயற்றிறன் கூடியதாகவும் காணப்படுகின்றது.

D - நாம மற்றும் உண்மை நிறைவேற்றுப்பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

E - சட்டத்துறையிலிருந்து நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படுகின்றது.

1) ADE 2) ABDE 3) ACE 4) ABCD 5) ACDE

7. சட்டத்தின் ஆட்சி என்பது.

A - சட்டத்தின் உயர்தன்மையை வலியுறுத்தும் கோட்பாடு ஆகும்.

B - சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்பதனை ஏற்றுக்கொள்கின்றது.

C - ஜனநாயக ஆட்சி முறைக்கு அடிப்படையானது.

D - ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையில் சட்டத்தில் தனித்துவத்தினை வலியுறுத்துகின்றது.

E - பிரித்தானிய அரசியல் முறைமையில் சிறப்பாக பின்பற்றப்படுகின்றது.

1) ABC 2) ABCD 3) ACDE 4) ABCE 5) BCE

8. அமுக்ககுழுக்கள் என்பது.

A - ஐரோப்பா மற்றும் அமெரிக்க அரசறிவியலின் முக்கிய சமூகக் குழுவாகும்.

B - தமது தனிப்பட்ட நலன்களை அடைந்து கொள்ள முற்படுகின்ற குழுக்களாகும்.

C - அரச அதிகாரத்தினை மையப்படுத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

D - சில அமுக்க குழுக்கள் தனித்துவமான அரசியல் கருத்தியலை கொண்டமைந்துள்ளன.

E - பரந்த கோட்பாட்டு இலக்குகளைக் கொண்ட அமுக்ககுழுக்களும் காணப்படுகின்றன.

1) ABCD 2) ABCE 3) ACDE 4) BCDE 5) ABDE

9. அரசு என்பது

A - இறைமை அதிகாரத்தினை தனக்கேயுரியதாக கொண்டமைந்த நிறுவனமாகும்.

B - நிலைபேறுடைய நிறுவனமாக காணப்படவில்லை.

C - சமூகத்திற்கு இன்றியமையாத ஓர் நிறுவனமாகும்.

D - சர்வதேச அரசியலின் முக்கிய செயற்பாட்டாளராக விளங்குகின்றது.

E - பூகோளமயமாக்கலினால் ஆட்புல எல்லை என்பது கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

1) BCDE 2) ACDE 3) ABCE 4) ACDE 5) ABCD

10. பிரதிநிதித்துவ ஜனநாயகம் செயற்படுவதற்கு தேவையான விடயங்கள்.

A - யாப்புறுவாதம்

B - தடைகளற்ற சுதந்திரம்

C - அரசுடமைப் பொருளாதாரம்

D - போட்டிக்கட்சி முறை

E - சுதந்திரமான தேர்தல்

2) ABCD 2) ABCE 3) ABDE 4) ACDE 5) BCDE

- **11 - 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுக்களை கொண்டுள்ளது. அவற்றுள் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க.**

11. இறைமை என்பது.
    1) சமூகத்தில் சகல அமைப்புக்களுக்கும் கிடைக்கும் ஓர் அதிகாரமாகும்.
    2) அரசின் மீயுயர் அதிகாரத்தினை குறித்து நிற்கின்றது.
    3) ஏனைய அரசுகளின் தலையீட்டினை ஏற்றுக்கொள்கின்றது.
    4) சமஷ்டி அரசுகளில் மத்தியமயப்படுத்தப்பட்டிருக்கும்.
    5) எப்போதும் பிரிக்க முடியாது.

12. ஓர் அரசியல் கருத்தியல்.
    1) சமூகத்தின் அரசியல் அக்கறையை சீராக்குகின்றது.
    2) பரஸ்பரம் முரண்பட்ட கருத்துக்களை கொண்டுள்ளது.
    3) எப்போதும் சமயக் குழுக்களிடமிருந்து விசுவாசத்தினை எதிர்பார்க்கும்.
    4) பிரசைகளின் அரசியல் நடத்தையின் மீது செல்வாக்குச் செலுத்துவதில் இருந்து விடுபடுகின்றது.
    5) எப்போதும் நடைமுறையில் இருக்கும் ஒழுங்குக்கு எதிராக செல்லும்.

13. முரண்பாடு தொடர்பான சொற்பாட்டு ரீதியிலான வகைப்பாட்டுக்களை ஓர் உதாரணம்.
    1) அரச நிர்மான மோதல்கள்.
    2) தனிநபர்களுக்கிடையிலான மோதல்கள்.
    3) ஆக்கப்பூர்வமான மோதல்கள்.
    4) தேசங்களுக்கிடையிலான மோதல்கள்.
    5) அரசுக்குள் உள்ளக மோதல்கள்.

14. பிரதிநிதித்துவ ஜனநாயகம்.
    1) நேரடி ஜனநாயக முறைக்கு ஒப்பான பண்புகளைக் கொண்டுள்ளது.
    2) பாராளுமன்ற அரசாங்க முறையூடாக வளர்ச்சி பெற்றது.
    3) ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற கருத்துக்கு எதிரானது.
    4) மக்கள் தீர்ப்புக்கான ஓர் மாற்றீடாகும்.
    5) ஏதேச்சதிகார அரசாங்க முறையொன்றின் பண்பாகும்.

15. பெண்ணியவாதம்
    1) பெண்பிள்ளைகளுக்கு தனியான பாடசாலைகளை முன்மொழிகின்றது.
    2) சமத்துவத்தை புறக்கணிக்கின்றது.
    3) கிரேக்க காலத்தில் தோற்றம் பெற்ற ஒரு கருத்தியல்.
    4) பெண்களால் அனுபவிக்கப்படும் பாரபட்சங்களை முடிவுக்கு கொண்டுவர எத்தனிக்கின்றது.
    5) குடும்ப நலனின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

16. கூட்டு சமஷ்டி அரசாங்க முறை.
    1) ஏனைய அரசாங்க முறைகளை விட வினைத்திறன் மிக்கது.
    2) பலமான மத்திய அரசாங்கத்தைக் கொண்டது.
    3) தனியானதொரு சட்டமுறையினைக் கொண்டுள்ளது.
    4) ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய அரசியல் அமைப்புக்கு முன்னர் காணப்பட்டது.
    5) சுதந்திரமான அரசுகளுக்கிடையில் ஓர் ஒப்பந்தத்தினை அடிப்படையாக கொண்டதல்ல.

17. இலங்கையின் காலணித்துவ நிலைமாற்றமானது.
    1) சமூகத்தின் கலாசார மாற்றங்களை மட்டும் ஏற்படுத்தியது.
    2) மத்தியமயமான அரசாங்க முறையினை ஏற்படுத்தவில்லை.
    3) சுயசார்பு பொருளாதார முறை வளர்ச்சியடைந்தது.
    4) சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியது.
    5) நீதித்துறை தேசாதிபதியின் பொறுப்பின் கீழ் தொடர்ந்தும் காணப்பட்டது.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

18. கோல்புறுக் கமெறன் சீர்திருத்தம்.
    1) வாக்குரிமையினை அறிமுகம் செய்தது.
    2) சட்டசபையினை அறிமுகம் செய்தது.
    3) சபாநாயகர் முறையினை அறிமுகம் செய்தது.
    4) இராஜகாரிய முறையினை அறிமுகம் செய்தது.
    5) நீதிமறை முறையினை அறிமுகம் செய்தது.

19. கோல்புறுக் தொடக்கம் டொனமூர் வரையிலான அரசியல் யாப்பு சீர்திருத்தம்.
    1) இனவாரி பிரதிநிதித்துவ முறை மூலம் மட்டும் உறுப்பினர் நியமிக்கப்பட்டனர்.
    2) பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகம்.
    3) மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
    4) இன அடிப்படையிலான பிளவுகள் தோற்றம் பெறவில்லை.
    5) பிரதமர் தலைமையிலான அமைச்சரவை முறை உருவாக்கப்பட்டது.

20. சர்வசன வாக்குரிமை அறிமுகம்.
    1) பாமர மக்களை அரசியலில் பங்கேற்பினை அதிகரிக்கச் செய்தது.
    2) மறை முக ஜனநாயகத்திற்கு அவசியமற்றது.
    3) உயர் குழாம் அரசியலில் ஈடுபடும் வாய்ப்பினை அதிகரித்தது.
    4) மக்கள் சமத்துவத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை.
    5) பொறுப்பு கூறும் அரசாங்க முறைக்கு ஏற்புடையது அல்ல.

- ***21 – 25 வரையான வினாக்களுக்கு பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.***

21. டொனமூர் அரசியல் யாப்பு முறையானது.
    1) சட்டசபை ஓரங்க சபையாகக் காணப்பட்டது.
    2) பிரதிநிதித்துவ ஜனநாயகம் தோற்றம் பெற்றது.
    3) 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்குள்ளமையினை பிரயோகித்தமை.
    4) சமூக நல சேவை அடிப்படையில் அரசு தொழிற்பட்டது.
    5) பொதுச்சேவை தொடர்ந்தும் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தது.

22. சோல்பரி அரசியல் யாப்பு முறையானது.
    1) பாராளுமன்ற இறைமையை கொண்டிருந்தது.
    2) ஈரவை பாராளுமன்றம் காணப்பட்டது.
    3) நாமநிர்வாக முறை அறிமுகம் செய்தது.
    4) பொதுச்சேவை மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.
    5) சிறுபான்மையோர் காப்பீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

23. வரையறுக்கப்பட்ட அரசாங்கம் என்பது.
    1) யாப்புறுவாதம் காணப்படல்.
    2) சிவில் சமூகம் செயற்படல்.
    3) வலுவேறாக்கம் காணப்படும்.
    4) நீதிப்புனராய்வு காணப்படல்.
    5) ஊடக சுதந்திரம் அவசியமற்று காணப்படல்.

24. அமெரிக்க அரசியல் யாப்பு.
    1) எழுதப்பட்ட நெகிழ்ச்சியற்ற யாப்பாக காணப்படுதல்.
    2) நீதிப்புனராய்வு முறையினைக் கொண்டு காணப்படுதல்.
    3) இரண்டு சபைகளைக் கொண்ட சட்டத்துறை காணப்படல்.
    4) கபினட் அரசாங்க முறை காணப்படல்.
    5) தடைகள் மற்றும் சமநிலைத் தலையீடுகள் காணப்படல்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

25. சோல்பரி யாப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபையானது.
   1) தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   2) நாமநிர்வாகிகளை பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தினை பெற்றிருந்தது.
   3) உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை.
   4) சட்டவாக்கத்தில் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தினைக் கொண்டிருந்தது.
   5) மகாதேசாதிபதியால் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல் அதிகாரங்களுக்குட்பட்டு செயற்பட்டது.

- **26 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களை கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள 1,2,3,4,5 ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாக பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| **இலக்கம்** | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | **கூற்று 1** | **கூற்று 2** |
|---|---|---|
| 26. | டொனமூர் யாப்பின் அமைச்சரவையின் தலைவராக தேசாதிபதி காணப்பட்டார். | அமைச்சரவையாக கூட்டுப்பொறுப்புடன் செயற்பட்டது. |
| 27. | சர்வசன வாக்குரிமை மூலம் இலங்கையர்கள் முழுமையாக அரசியலில் பங்கேற்றனர். | சர்வசன வாக்குரிமை அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கான தளத்தினை வழங்கியது. |
| 28. | சோல்பரி யாப்பின் செனற்சபை அதிகாரமிக்க சபையாகக் காணப்பட்டது. | செனற்சபை 1ம் மன்றத்தின் இறப்பர் முத்திரையாக தொழிற்பட்டது. |
| 29. | சுதந்திரமடைந்த பின்பே வெஸ்ட் மினிஸ்டர் முறைமை ஆரம்பமாகியது. | வெஸ்ட் மினிஸ்டர் முறையின்படி சோல்பரி மற்றும் 1ம் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டது. |
| 30. | சோல்பரி யாப்பில் சிறுபான்மை இன மக்களுக்கான காப்பீடுகள் வழங்கப்பட்டன. | சிறுபாண்மையோர் காப்பீட்டில் 29ம் ஆத்தின் 2ம் பிரிவு சிறுபான்மையின் மக்களின் சிறந்த காப்பீடு ஆகக் காணப்பட்டது. |

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

## பகுதி I - B

- ***20 குறுவினாக்களிற்கும் இவ் வினாத்தாளில் விடை எழுதுக.***

31. அரசியல் கோட்பாடு இரண்டு வகைக்குள் உட்படுத்தப்படுகின்றன. அவற்றினை குறிப்பிடுக.

   1. ………………………………………………………………………………………………….

   2. ………………………………………………………………………………………………….

32. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களின் மூலம் நவீன உலகில் செயற்பாட்டில் உள்ள ஓர் அரசாங்க முறையும் ஓர் அரசு முறையும் விபரிக்கப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு பெயர் குறிப்பிடுக.

   1. மக்களினால் மக்களுக்கான உள்ள மக்களின் அரசாங்கம்.

      ………………………………………………………………………………………………...

   2. அதன் பிரசைகளுக்குச் சமூக சேவைகளையும் சமூக பாதுகாப்பையும் வழங்கும் அரசு.

      ………………………………………………………………………………………………...

33. பின்வரும் தத்தவங்களை வலியுறுத்துகின்ற இரு அரசியல் கருத்தியல்களைப் பெயரிடுக.

   1) சுதந்திரம், உயிர் வாழ்தல் மற்றும் தனியார் சொத்து தொடர்பான உரிமை.

   ………………………………………………………………………………………………….

   2) அரசு தனியார் சொத்துடமையின் தோற்றத்துடன் எழுச்சி பெறுகின்றது.

   ………………………………………………………………………………………………….

34. காலனித்துவத்தை உருவாக்குவதற்கு இரு வழி முறைகள் காணப்படுகின்றன. அவ்விரு வழிமுறைகளையும் குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………………….

   ………………………………………………………………………………………………….

35. பின்வரும் ஒவ்வொரு அரசியல் கோட்பாட்டினையும் முன்வைத்த இரு அரசியல் கோட்பாட்டாளர்கள் பெயரைக் குறிப்பிடுக.

   1) சமூக குடியுரிமை …………………..……………………………………………………

   2) பின் காலணித்துவ அரசு ………………………………………………………….………

36. 1) "சிவில் சமூகம் என்பது அரசு மற்றும் பிரஜைகளுக்கு இடையே காணப்படும் சமூக கலாச்சார வாய்ப்பாகும்"

   2) அரசு சமூக நிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொது நலனுக்காக செயற்படுவதால் இது ஏனைய சமூக நிறுவனங்களை விட உயர்வானது"

   மேற்குறிப்பிட்ட கூற்றுக்களை முன்வைத்தவர்களின் பெயர்களைத் தருக?

   ………………………………………………………………………………………………...

   ………………………………………………………………………………………………...

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

37. உள்ளக முரண்பாடுகள் தோன்றுவதற்கான காரணிகளில் இரண்டினைத் தருக?

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

38. காலனித்துவ நிலை மாற்றத்தினால் இலங்கையின் பொருளாதாரம் இரட்டை பொருளாதாரமாக தோற்றம் பெற்றது. அவற்றைத் தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

39. இலங்கையின் பிரதிநிதித்துவ முறை வளர்ச்சிக் கட்டங்கள் 2 யாப்பு சீர்திருத்தங்கள் மூலம் ஏற்ட்டது. அவற்றினைத் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

40. சோல்பரி யாப்பின் சிறுபான்மையோரின் பாதுகாப்பினை காப்பீடுகுள் 2 தருக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

41. சுதந்திர இலங்கையில் வெஸ்மினிஸ்டர் மாதிரியில் அமைந்த அரசியல் யாப்புக்கள் 2 தருக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

42. 1) "ஜனநாயகம் என்பது ஓர் ஆட்சிமுறை மட்டும் அல்ல மாறாக வாழ்வியலும் ஆகும்"

2) "அரசியலமைப்பு என்பது அரசாங்கத்தின் அதிகாரம் ஆளப்படுவோரின் உரிமைகள் மற்றும் ஆள்வோர் ஆளப்படுவோருக்கிடையிலான தொடர்புகளை தீர்மானிக்கும் கொள்கைகளின் தொகுதியாகும்"

மேற்க்குறிப்பிட்ட கூற்றுக்களை முன்வைத்த சிந்தனையாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

43. இந்திய அரசியலமைப்பின் படி அவசரகால நிலையினை பிரகடனப்படுத்தும் 3 சந்தர்ப்பங்களில் இரண்டினைத் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

44. பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

1) ஒப்பிட்டு அரசியல் ……………………………………………………………

2) அரசியல் மனிதன் அரசியல் சமூக அடிப்படை ……………………………………………



agaram.lk

45. சமாதானம் பற்றி ஜோகான் கல்டுங் அறிமுகப்படுத்திய இருவகையான முறையையும் தருக.

.......................................................................................................................

.......................................................................................................................

46. சோல்பரி யாப்பின் கீழ் செனட் சபைக்கு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்ட முறையையும் எண்ணிக்கையையும் தருக.

.......................................................................................................................

.......................................................................................................................

47. 1) 1972ம் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நாம நிறைவேற்றாளர் பதவியின் உத்தியோக ரீதியான பெயர் யாது?

.......................................................................................................................

.......................................................................................................................

2) 1972, 1ம் குடியரசு யாப்பின் நாம நிறைவேற்றாளரின் பதவிக்காலம் யாது?

.......................................................................................................................

48. கூட்டு சமஷ்டியாக ஆரம்பித்து பின்னர் சமஷ்டி அரசாங்க முறையினை தழுவிக் கொண்டுள்ள 2 நாடுகளைக் குறிப்பிடுக.

.......................................................................................................................

.......................................................................................................................

49. 1) இலங்கையில் எந்த அரசயில் யாப்பின் கீழ் முதன் முதலாக பகிரங்கசேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது?

.......................................................................................................................

.......................................................................................................................

3) இலங்கையில் எந்த அரசியில் யாப்பின் கீழ் பகிரங்க சேவையை அரசியல் நிறைவேற்றுப் பகுதியின் கீழ் கொண்டு வருவதற்காக பகிரங்க சேவை ஆணைக்குழு இல்லாது ஒழிக்கப்பட்டது?

.......................................................................................................................

50. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் முறைக்கு அவசியமான பண்புகள் 2 தருக.

.......................................................................................................................

.......................................................................................................................



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination – 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் II<br>Political Science II | Three Hours<br>Gr -13 (2021) | 23 | T | II |

### பகுதி II

❖ பகுதி 2 மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது, பிரிவு 1 லிருந்து ஒரு வினாவும் பிரிவு இரண்டிலிருந்து இரண்டு வினாக்களும் பிரிவு 3 லிருந்து ஒரு வினாவும் கட்டாய வினாக்களாகும். பிரிவு 1, 2, 3 விரும்பிய ஒரு வினாவினை தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

### பகுதி - அ

01) அரசியலை கற்பதற்கு பயன்படுத்தப்படும் நடத்தைவாத அணுகுமுறையினை விபரிக்குக?

(20 புள்ளிகள்)

02) தாராள ஜனநாயக மற்றும் பாசிச அரசு மாதிரிகளுக்கிடையிலான வேறுபாடுகளை ஆராய்க.

(20 புள்ளிகள்)

03) பின்வருவனவற்றில் இரண்டினை ஆராய்க.

i) அணைததாண்மை அரசாங்க முறை

ii) தேசிய வாதம்

iii) சிவில் சமூகம்

(10x2=20 புள்ளிகள்)

agaram.lk

### பகுதி - ஆ

04) காலணித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை நுணுக்கமாக விபரிக்குக.

(20 புள்ளிகள்)

05) “டொனமூர் அரசியல் யாப்பு இலங்கையர்களுக்கு $\frac{07}{10}$ பொறுப்பாட்சியினையே வழங்கியுள்ளது” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க?

(20 புள்ளிகள்)

06) பின்வருவனவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.

i) சோல்பரி யாப்பில் மகாதேசாதிபதியின் வகிபங்கு.

ii) சோல்பரி யாப்பின் பகிரங்க சேவை ஆணைக்குழு.

iii) சொற்சபையின் வகிபங்கு.

(10x2=20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

07) சோல்பரி மற்றும் 1ம் குடியரசு யாப்புகளின் கீழ் சட்டசபையினை பின்வரும் தலைப்புகளில் ஆராய்க?

i) அமைவுச் சேர்க்கை

ii) அதிகாரங்களும் பணிகளும்

(10x2=20 புள்ளிகள்)

## பகுதி - இ

08) சனநாயக ஆட்சிமுறையின் பண்புகளை விபரிக்குக?

(20 புள்ளிகள்)

09) பின்வருவற்றில் இரண்டினை ஒப்பீட்டு ஆராய்க.

i) அமெரிக்க சமஷ்டி முறையின் பண்புகள்.

ii) சுவிஸ்லாந்து சமஷ்டி முறையின் பண்புகள்.

iii) இந்திய சமஷ்டி மற்றும் ஒற்றையாட்சி பண்புகள்

(10x2=20 புள்ளிகள்)

10) பின்வருவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.

i) அரசியல் நிறுவனங்களை கற்பதன் முக்கியத்துவம்

ii) முரண்பாட்டின் வாழ்க்கை சக்கரம்

iii) குடியரசுவாதம்

iv) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் முறை

(10x2=20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk